பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5.00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 18 திங்கட்கிழமை (04 10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 310

கிளாலியை விட்டு வெளியேறுவதா? இராணுவத் தரப்பு ஆராய்கின்றது

தக்க வைத்திருப்பது கஷ்டம்

கொழும்பு, ஒக்ரோபர் 4

படையினர் தாம் கைப்பற்றியதாகக் கூறும் கிளாலிப் பகுதியை தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதா அல்லது அங்கிருந்து வெளியேறுவதா என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

இராணுவத் தரப்பை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்சிகள் இத்தகவலை வெளியிட்டன.

பிடித்த கிளாலியை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கமாட்டாது என்ற ஊகங்களும் எழுந்திருப்பதாக செய்தி ஏஜென்சிகள் குறிப்பிட்டன.

"ஒப்பரேஷன் யாழ்தேவி" நடவடிக்கையின் போது இராணுவம் கைப்பற்றிய பகுதிகளை படையினர் தம்வசம் வைத்திருப்பதானால் மேலும் பல நூற்றுக் கணக்கான துருப்புகள் தேவைப்படும் என்றும் —

(4 ஆம் பக்கம் பார்க்க)

புலோப்பளை — அல்லிப்பளையில் சம்பவம்:

புலிகளின் கண்ணியில் சிக்கி இரு கவசவாகனங்கள் சேதம்

ஐந்துக்கும் அதிகமான படையினர் பலி; பலர் காயம்

நேற்று முன்தினம் புலோப்பளை — அல்லிப்பளைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவத்தினரின் இரு கவசவாகனங்கள் சேதமாக்கப்பட்டன. ஐந்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; மேலும் பலர் காயமடைந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தலைமை அலுவலகம் இச்செய்தியை ஊர்ஜிதம் செய்தது.

கிளாலியில் புகை மண்டலம் மக்களின் வீடுகள் எரிப்பு?

படையினரின் சூட்டுக்கு இருவர் பலி

யாழ்ப்பாணம், ஒக். 4

கிளாலிக் கரைப் பகுதியில் நேற்றுப் பிற்பகலில் புகை மண்டலம் தெரிந்ததாக அப்பகுதியிலிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

கிளாலியில் பொதுமக்களின் வீடுகள் மற்றும் உடைமைகளை படையினர் தீயிட்டு எரித்ததால் எழுந்த புகை மண்டலமே அது எனக் கருதப்படுகிறது.

இதே சமயம்—

நேற்று முன்தினம் கிளாலிச் சந்திக்கு அண்மையில் செபதேஜு (வயது சுமார் ஐம்பது) என்பவரும் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்ட — சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க— ஒரு பெண்ணும் படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இரவிலும் புக்காரா தாக்குதல்

அல்லிப்பளை, புலோப்பளை, மற்றும் கிடந்தல்பளை, பண்டிதர் குடியிருப்புப் பகுதியை அண்டிய பிரதேசங்கள் மீது நேற்று இரவு 7 மணிக்குப் பின்னரும் 'புக்காரா' விமானங்கள் தாக்குதல் நடத்தியதாகத் தெரியவந்தது. (உ-9)

இதற்கிடையில்—

அல்லிப்பளை — புலோப்பளைப் பகுதியில் கரையோரமாக தரித்து நின்ற படையினர் கிளாலியை நோக்கி நகர்ந்ததை அடுத்து அப்படையினருக்கும் ஆனையிறவு, இயக்கச்சிப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினருக்கும் இடையிலான தரைவழித் தொடர்பு அற்றுப் போயிருப்பதாகவும்—

அல்லிப்பளை — புலோப்பளை கரையோரமாகச் சென்ற படையினர் அப்பகுதியை விட்டு நகர்ந்து விட்டதாக அங்கு துருப்புகள் நடமாட்டம் இல்லை என்றும் மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-9)

வை. கோபாலசாமிக்கு ஆதரவாக

கருணாநிதியைக் கொல்ல புலிகள் திட்டமிட்டுள்ளனராம்!

சென்னை, ஒக். 4

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியைக் கொல்ல

மு. கருணாநிதி

விடுதலைப் புலிகள் திட்டம் வைத்திருப்பதாக தமிழக அரசு திரு. கருணாநிதிக்கு அறிவித்துள்ளது.

மத்திய அரசிடம் இருந்து கிடைத்த உறுதி செய்யப்படாத தகவல் ஒன்றைத் தொடர்ந்து— தமிழக முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் — தமிழக அரச தலைமைச் செயலாளர் தனக்கு இதுபற்றி அறிவித்துள்ளதாகத் திரு. கருணாநிதி தெரிவித்தார்.

தி. மு. க. தலைமைப் பதவியை வை. கோபாலசாமியிடம் ஒப்படைப்பதற்காக விடுதலைப் புலிகள் தம்மை அப்புறப்படுத்த விரும்புவதாகவும் திரு. கருணாநிதி தெரிவித்தார்.

கூடுதல் பாதுகாப்பு முன் ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படி தமிழக மாநில அரசு அதிகாரிகள் தமக்கு ஆலோசனை கூறியுள்ளதாகவும்—

இதனைத் தொடர்ந்து தமக்கு உரிய பாதுகாப்பு வழங்கும்படி [illegible] தாம் வேண்டியிருப்பதாகவும் திரு. கருணாநிதி மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் திட்டம் குறித்த எச்சரிக்கையை அலட்சியம் செய்ய வேண்டாம் என்ற செய்தி ஜெயல [illegible]

வை. கோபாலசாமி

(4 ஆம் பக்கம் பார்க்க)

அ'புரம் ஆஸ்பத்திரியில் படையினரின் 81 சடலங்கள்!

கொழும்பு, ஒக். 4

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்ட 150 க்கும் அதிகமான [illegible] இராணுவத்தினரில் (படையினரால் மீட்கப்பட்ட 81 பேரின் சடலங்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

படையினரின் சடலங்கள் போர்முனையில் இருந்து ஹெலிக்கொப்டர்கள் மூலம் பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து விமானங்கள் மூலம் இரவு பகலாக அனுராதபுரத்துக்கு ஏற்றிச் செல்லப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

படையினருக்கு சிகிச்சையளிக்க

மேலதிக டாக்டர்கள் அனுராதபுரம் விரைவு

கொழும்பு, ஒக். 4

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது படுகாயமடைந்த பெரும் எண்ணிக்கையானோர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க கொழும்பு மற்றும் தென்பகுதி ஆஸ்பத்திரிகளில் இருந்து மேலதிக டாக்டர்கள் மற்றும் தாதிகள் அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்

கொழும்புப் பத்திரிகைகளில் இவ்வாறு செய்தி வெளியாகியுள்ளது.

அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் ஒரேயடியாக காயமுற்ற படையினர் ஏராளமானோர் அனுமதிக்கப்பட்டதால், அங்கு கடமையில் இருந்த டாக்டர்கள் திணறிப் போனதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கொழும்பு ஆஸ்பத்திரியிலும் காயமடைந்த 114 படையினர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ 3)

பலாலியில் ஹமில்டன்

கொழும்பு, ஒக். 4

ஒப்பரேஷன் யாழ்தேவியில் படையினருக்கு பேரிழப்பு ஏற்பட்டதை அடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க அவசரமாக பலாலிக்கு வந்து படைத்துறை தளபதிகளைச் சந்தித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஜெனரல் வனசிங்க படையினரின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது.

இதேவேளை—

வடக்கில் ஆரம்பிக்கப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கையான 'யாழ்தேவி' நடவடிக்கையை 25 தினங்களுக்கு மேற்கொள்ள ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஒ-3)

'யாழ்தேவி' நடவடிக்கையால் 12,000 பேர் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஒக். 4

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையால் சுமார் 3 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என யாழ். செயலகத்தின் ஆரம்ப கணிப்பீடுகள் தெரிவித்துள்ளன.

பளை, புலோப்பளை, கிளாலி, தர்மக்கேணி, எழுதுமட்டுவாள், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் இருந்தே மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் வரணி மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பான்மையான மக்கள் வடமராட்சி, நாவற்குழி, கொடிகாமம் பகுதிகளுக்கு சென்றுள்ளனர்.

இடம்பெயரும் மக்களின் உடைமைகளை அப்புறப்படுத்தும் பணிகளிலும், அவர்களுக்கான இருப்பிட, உணவு வசதிகளை வழங்கும் பணியிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. (உ-3)

வல்லைவெளியில் நேற்று லொறி மீது ஹெலி தாக்கு

வடமராட்சி, ஒக். 4

வல்லைவெளியில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் ப.நோ.கூ. சங்க லொறியை நோக்கி ஹெலியில் இருந்து றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது. தெய்வாதீனமாக விபரீதம் ஏதும் ஏற்படவில்லை.

வல்லைவெளி வான் பரப்பில் திடீரென வந்த ஹெலி பல தடவைகள் வட்டமிட்டு விட்டு முனியப்பர் கோயிலுக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த லொறியை நோக்கித் தாக்குதல் நடத்தியது என்று தெரிவிக்கப்பட்டது.

இது பற்றித் தெரியவருவதாவது:

வானில் ஹெலியைக் கண்ட நல்லூர் ப.நோ.கூ. சங்க லொறியின் சாரதியும். [illegible] உடனடியாக முனியப்பர் கோயிலுக்கு முன்னால் லொறியை நிறுத்திவிட்டுஓடிச் சென்று கோயிலின் சுவர்களின் ஓரமாக ஒதுங்கிக் கொண்டனர்.

அங்கு இன்னும் பலர் [illegible] தஞ்சம் அடைந்திருந்தனர்.

அச்சமயம் ஹெலி றொக்கட் தாக்குதலை நடத்தியது; ஆனால் லொறிக்கோ, ஆலயத்துக்கோ மற்றும் அங்கு தஞ்சம் அடைந்திருந்த எவருக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

வர்ணப்படச் சுருள்கள் (Colour Films) விற்பனைக்கு உண்டு. இல. 766, கே. கே. எஸ் வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். (27530)

நல்ல இன பசுக்களும் பசுக்கன்றுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ரெட்ணா கபே, இல. 780, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (27501)

விறாத்துக் குஞ்சுகளும், இறைச்சிக் கோழிகளும் விற்பனைக்கு உண்டு. இறைச்சிக் கோழிகள் உடன் சுத்தம் செய்து கொடுக்கப்படும். இல. 09, சந்தையா லேன், சூராவத்தை, சுன்னாகம். (6674)

விற்பனையாகின்றது

G C E O/L வகுப்புக்கான தமிழ், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்களின் 10 மாதிரி வினாத்தாள்களும், 5 வினாத்தாள்களுடன் விடைகளும் விலை ரூபா 90/-. உயர்கல்வி பதிப்பக வெளியீடு. கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (ஞி-6156)

வெளிவந்துவிட்டது

யாழ். இந்துவின் முன்னாள் அதிபர் கம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் வாழ்க்கை பற்றிய "மக்கள் நேசன் கார்த்திகேசன் மாஸ்ரர்" நூல் விலை ரூபா 35/-. ஆக்கம்: வி. சின்னத்தம்பி, வட்டுக்கோட்டை. (27531)

சீயாக்காய்ப் பவுடர்

ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் சித்த மருத்துவ முறைப்படி சீயாக்காய், பயறு, வெந்தயம் உட்பட பல மூலிகைகள் சேர்த்து தயாரிக்கப்பட்டது. கண்குளிர்ச்சி, கூந்தல் வளர்ச்சி, சுகமான வாழ்விற்கு ஆனந்தம். 25 கிராம், 100 கிராம் பக்கற்றுகளில் கிடைக்கும். யாழ். நகரில் குகன் ஸ்ரோர்ஸில் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். (6513)

ஆசிரியர் பயிற்சி

பாலர் ஆசிரியராகப் பயிற்சி பெற க. பொ. த. (சா/த) கல்வித் தகைமை. நேரில் கற்க முடியாதோர் தபாலிலும் கற்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். 6510)

புதிய நெல் இனம்

கொழும்பு, ஒக் 4

அதிக விளைச்சலைத் தரும் புதிய நெல் இனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பத்தலகொட விவசாய ஆராய்ச்சி நிலையம் இதனைக் கண்டுபிடித்துள்ளது.

விவசாயிகள் தினமான இம்மாதம் 10ஆம் திகதி இப் புதிய நெல் இனம் அறிமுகம் செய்யப்படவுள்ளது. (த-ள)

NEW SCIENCE
ACADEMY

A/L
DAY CLASS
NEW BATCH
APP. & PURE
MATHS

Tu] 10 00 — 12 00
Th] 4 00 — 6 00

TEACHER
THASAN
(B. Sc)

START:
07 - 10 - 1993

(வாரத்தில் 8மணித்தியால வகுப்புகள்)
(ஞி-5985)

வாழ்த்துகிறோம்

திருமதி
பரமேஸ்வரி பரராஜசிங்கம்
B. Sc. (Dip - in-Ed.)
(இராமநாதன் கல்லூரி மேலதிக அதிபர்)

இராமநாதன் கல்லூரியில் மேலதிக அதிபராகக் கடமை புரிந்த திருமதி பரமேஸ்வரி பரராஜசிங்கம் அவர்கள் தமது 39 ஆண்டுகள் சேவையின் பின் 1993-10-04 முதல் ஓய்வு பெறுகின்றார். 1954-07-05 இல் ஆசிரிய சேவையில் கொழும்பு அனுலா மகா வித்தியாலயத்தில் முதல் நியமனம் பெற்றார். 1955-08-01 முதல் இராமநாதன் கல்லூரியில் உதவி ஆசிரியராகப் பதவியேற்றார். தமது சேவைக் காலத்தில் உயிரியல் பாடத்தை மிகச் சிறந்த முறையில் மாணவருக்குப் போதித்தார். கல்லூரியிலுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பெரும் பங்கேற்று அல்லும் பகலும் அனவரதமும் கடமை ஆற்றி கல்லூரியின் வளர்ச்சிக்கும், பெருமைக்கும் பாத்திரமாக விளங்கினார். 1989-09-14 முதல் உப அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். அக்காலத்தில் கல்லூரியின் நிர்வாகத்தைச் சிறப்புடன் நடத்தி வந்தார், 1993-09-14 முதல் இளைப்பாறும் வரை மேலதிக அதிபராகத் திகழ்ந்து கல்லூரிக்காகவே தம்மை அர்ப்பணித்தார். இக்கல்லூரியிலேயே நீண்ட காலம் பணியாற்றியமையால் கல்லூரி சம்பந்தமான சகல விபரங்களும் தெரிந்த அறிவுடையோராக விளங்கினார். நிர்வாகத் திறன், ஆளுமை, எடுத்த கருமத்தை செவ்வனே ஆற்றும் திறன், எடுப்பான தோற்றம், நேரிய நடை, புரிந்துணர்வு என்பன ஒருங்கே நிரம்பப் பெற்றவர். இவர் சகல சிறப்புக்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா / இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (ஞி-2031)

A/L 94 DAY CLASSES

பிரிவு II கலை, வர்த்தகம்

பாடம்	ஆசிரியர்	செவ் / வியா
பொருளியல்	S. வரதராஜன்	12-00 — 2-00
வர்த்தகம்	பசில்	10-00 — 12-00
கணக்கியல்	சௌந்தி	8-00 — 10-00

★ முதலாவது பிரிவிற்கு அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
★ அச்சடித்த வினா - விடைக் குறிப்புகள் வழங்கப்படும்.
★ மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறும்.

ஆரம்பம்: 07 - 10 - 1993
வியாழன்

BECON
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஞி 615 8

விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம்
தெல்லிப்பழை

பொதுப் பேரவைக் கூட்டமும், முகாமைக் குழுவின் செயலவை தெரிவும் (1993 - 95)

அழைப்பு

காலம்: 10 — 10 — 1993 ஞாயிறு
காலை 9 00 மணிக்கு

இடம்: வாழ்வகம் (புதிய மனிமனை)
சுவாமி ஞானப்பிரகாசர் வீதி, மல்வம்,
உடுவில்

வாழ்வகத்தின் உறுப்புரிமையுள்ள உறுப்பினர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

இங்ஙனம்,
வாழ்வகம், முகாமைக் குழுவினர்.

குறிப்பு: சந்தா செலுத்தாதோர், உரிய நிலுவைகளைச் செலுத்தி உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நன்றி
(ஞி-6164)

---

6 பேருக்கு நல்லின பசுக்கள்

வலிகாமம் தெற்கு, ஒக். 4

தமிழீழ கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் உசிலியோடை கிராமத்தில் வசதி குறைந்த பசு வளர்ப்பாளர்கள் அறுபேருக்கு நல்லின பசுக்கள் வழங்கப்பட்டன.

அண்மையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் வலிகாமம் கோட்ட அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு. வேங்கையன் நல்லினப் பசுக்களை பசு வளர்ப்பாளர்களிடம் கையளித்தார்.

கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வலிகாமம் தென்மேற்கு பகுதியில் ஆரம்பிக்கப்படும் முதலாவது திட்டம் இதுவாகும்.

பசுக்களை வளர்ப்பதும் பேணுவதும் ஒரு குழுவினால் கண்காணிக்கப்பட்டு வரும். பசு வளர்ப்புக்கான தீவனம், மருந்து வகைகள் தங்குமிடம் அமைப்பதற்கான வசதிகள் போன்றவற்றுக்கு காலா காலத்தில் நிதி உதவிகள் வழங்கப்படும் மீள அறவீடாக, முதல் கிடைக்கும் கன்றுக்குட்டியை எமக்கு தர வேண்டும் என்று இத் திட்டம் பற்றி எடுத்துக் கூறிய திரு. வேங்கையன் தெரிவித்தார். (த-152)

பனைவளப் போட்டிகளும் மாபெரும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஒக் 4

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியும் முல்லைத்தீவு, வன்னி, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த தென்னை பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து பனைவளப் போட்டிகளையும் மாபெரும் கண்காட்சியினையும் நடத்தவுள்ளனர்.

இந்தப் போட்டிகளும் கண்காட்சியும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இரண்டாம், மூன்றாம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளன.

பனம் பழச் சாற்றிலிருந்து புதிய உணவு தயாரிக்கும் போட்டிக்கு முதலாம் பரிசாக ஒரு பவுண் எடையுள்ள தங்கப்பதக்கமும், இரண்டாம், மூன்றாம் பரிசாக முறையே 5,000 ரூபாவும், 3,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

கண்காட்சியை ஒட்டி நடைபெறவுள்ள பனைசார் கைப்பணிப் பொருட்களுக்கான போட்டிகளுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படுவதுடன், அனைத்து போட்டிகளிலும் பங்குபற்றுபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. முல்லைத்தீவு, வன்னி, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த அனைவரும் இப்போட்டிகளில் பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஓய்வு காலத்தில் அதிகளவு சேவை செய்யவேண்டும்

மணி விழாவில் உரை

இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் அநாதைக் குழந்தைகளை பராமரிக்கும் பணி சிறப்பானது. அறச் சிந்தனைகள் எம்மை செம்மையாக வாழ வைக்கின்றன. தூய எண்ணங்கள் பெரு வெற்றியைத் தொடர்ந்து ஈட்டித் தருகின்றன. இவ்வழியில் நாட்டமுள்ள திரு. அருணா. நாகராஜன் இதுவரை செய்த பணிகளை விட ஓய்வு காலத்தில் இன்னும் அதிகளவு சேவை செய்ய வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற எழுத்தாளர் அருணா நாகராஜனின் மணிவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

மணி விழா ஞாபகார்த்த ஏட்டினை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தெல்லிப்பழை - இணுவில் கலை இலக்கியக் களம் சார்பில் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்ற மணிவிழாவிற்கு திரு. க. செல்லத்துரை தலைமை வகித்தார்.

திருமதி கோகிலா மகேந்திரன் வரவேற்புரையும், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்த்துரையும், கலைப்பேரரசு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை பாராட்டுரையும் வழங்கினர்.

கலைகேசரி திரு. ஆ. தம்பித்துரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

பல இலக்கிய நிறுவனங்கள் சமய நிறுவனங்கள், அமைப்புக்கள் சார்பாகவும் பொன்னாடைகள் போர்த்தி பாராட்டுரைகள் வழங்கப்பட்டன. (த-153)

முதலாம் ஆண்டின் நினைவு

04 - 10 1993

அமரர் பொ. செல்வரட்ணம்
(முன்னை நாள் கூட்டுறவுப் பரிசோதகர், செயலாளர் யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை, தலைவர் மறுமலர்ச்சி மன்றம், தலைவர் யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசம்)

கூட்டுறவின் உறவாகி
உயிராகி
அதை - உரமாக்கி
பெரு - மரமாக்கி

ஆண்டொன்றின் அசைவிலும்
உங்கள் பணியும் நினைவும்
பசு மரத்தாணியாய்
இன்றும்
இனியும் ....

மனைவி, உறவினர்,
நண்பர்கள்.

மானிப்பாய். (27532)

உதயன்

வாங்கும் நிலை இனி வேண்டாம்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதற்கு அரசு முனைந்திருப்பது பேராபத்தாக முடியும். அரசியல் பிரச்சினை ஒன்றுக்கு யுத்தம் நடத்துவதன் மூலம் தீர்வு தேடினால் இரண்டாயிரமாவது ஆண்டுக்கு முன்னர் நாடு இரு கூறுகளாகப் பிரிந்து விடும். நாங்கள் தமிழீழத்தைக் கொடுக்க வேண்டி வரும்; அல்லது அவர்களே (தமிழர்களே) ஈழத்தை வென்று எடுத்துக் கொள்வார்கள்.

இவ்வாறு தென்னிலங்கை அரசியல்வாதிகளை எச்சரித்திருக்கிறார் விமானப் படையின் முன்னாள் தளபதி ஹரி குணதிலக்கா.

எயர் மார்ஷல் ஹரி குணதிலக்கா ஒரு முன்னாள் தளபதி. இராணுவத் துறையில் நீண்ட காலம் சேவை ஆற்றியவர் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளக் கூடியவராக விளங்குகிறார். அதனால் இராணுவத் தீர்வு நாட்டை எங்கே இட்டுச் செல்லும் என்பதனை உணரும் திறமையும் முன்னோக்கும் அவரிடம் இருக்கிறது. முன்னர் பல தடவைகள் அவர் தெரிவித்த கருத்துக்களில் இருந்தும் இவற்றை அவதானிக்க முடிகிறது.

இராணுவத் தீர்வு ஆபத்தானது. தமிழர்களுக்கு ஆகக் குறைந்தது மாநில சுயாட்சியாவது வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. சமஷ்டி ஆட்சி முறையாவது கொண்டு வரப்பட வேண்டும். இல்லையேல் கூட்டாட்சியை (Confedaration) கூட அமைக்க முடியாத நிலைமை தோன்றும்.

இவ்வாறான கருத்துக்களை ஹரிகுணதிலக்காவைப் போல, ஏனைய சில சிங்களப் பிரமுகர்களும் முன் வைத்திருந்தார்கள். அவர்களில் பேராசிரியர் உடகொட, முன்னாள் சிவில் சேவை அதிகாரி ஆட்றின் விஜேநாண, பிரேமதாசாவின் ஆலோசகராக இருந்த தயான் ஜெயதிலக்கா போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

எவர் எதைக் கூறினால் என்ன, எந்த ஆலோசனையை இடித்துரைத்தால் என்ன, சிங்களப் பேரினவாதம் எதனையும் காதில் போட்டுக் கொள்ளும் நிலையில் இல்லை.

இலங்கை சிங்களவர் தேசம். பௌத்தத்தை பேணி, வளர்ப்பதற்கென்றே அது தோன்றியது என்ற மகாவம்ச மாயையில் மூழ்கி, நவீன உலகத்தைப் பார்த்து யதார்த்த சூழ்நிலைகளை அறிந்து கொள்ள முடியாதவாறு, கண்ணிருந்தும் குருடாகிவிட்ட சிங்களப் பேரினவாதத்தை எவராலும் திருத்த முடியாது!

அந்தப் பேரினவாத மாயைக்குள் சிக்குண்ட தெற்கின் அரசியல்வாதிகளும், புத்தி ஜீவிகளும் பலரும் இப்போதைக்கு விழித்துக் கொள்ளமாட்டார்கள். 40 வருட காலமாக உள்ள இனப்பிரச்சினையைத் தீர்க்காமலே, அவ்வாறு ஒன்று இல்லையென்று "முந்தா நாள்" கதிரைக்கு வந்த விஜேதுங்கா கூறுமளவுக்கு நிலைமை மேலும் மோசமாகியிருக்கிறது. அப்படியாயிருக்க அவர்கள் இராணுவத் தீர்வை நாடுவதைத் தடுக்க எவரால் முடியும்?

இராணுவத் தீர்வு தமிழர்களில் பெரும் பகுதியினரை அழிக்கும். அதற்குப் பயந்து அடிமைகளாக வேண்டும் என்பதோ, ஆயுதங்களைக் கீழே வைத்து சரணாகதி அடைய வேண்டும் என்பதோ அல்ல. ஹரி குணதிலக்கா கூறுவது போல தமிழர்கள் தமது நாட்டைத் தாமே வென்றெடுத்துக் கொள்ள வேண்டும். சிங்களவர்கள் ஈழம் தரும் வரை காத்திருக்கக் கூடாது. எத்தனை துயர்வரினும், கஷ்டங்களே சூழினும் தமிழர் நிலை இனி இதுவாகவே இருக்க வேண்டும்.

அன்பளிப்பு

சுன்னாகம் பொது நூலகத்துக்கு கனடாவில் வசிக்கும் திரு. கனகசபை ஜீவன் என்பவர் பல ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களையும், தளபாடங்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இதனைப் பாராட்டும் வைபவம் ஒன்று அண்மையில் நூலகத்தில் நடைபெற்றது. (க-89)

நாடாளுமன்றத் தூதுக்குழுவை வடபகுதிக்கு அனுப்பிவைக்குக!

தமிழ் எம். பி. கோரிக்கை

கொழும்பு, அக். 4

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சுகள் ஜனாதிபதி விஜேதுங்காவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் பல அரசியல் கட்சிகளின் நாடாளுமன்றத் தூதுக்குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விஜேதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் யாழ்ப்பாண மாவட்ட எம். பி. கே. ஸ்ரீநிவாசன் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு சிபார்சு செய்யும் அரசியல் தீர்வின் மாதிரியை — சிபார்சுகளை ஜனாதிபதி ஏற்றுக்கொண்ட பின்னர் — ஜனாதிபதியின் அதிகாரிகள் தயாரிக்க முடியும் என்றும் அவர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"சமாதானத் தீர்வில் இலங்கை அரசுடன் எதிர்க்கட்சித் தலைவர், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமைத்துவம் ஆகியோரும் கையெழுத்திட வேண்டும்.

"வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்கும் அதேசமயம் இலங்கை அரசு அதிகாரங்களையும் பணிகளையும் மாற்றிக் கொடுக்க வேண்டும்.

இரு தரப்பினரும் முதலில் சம்மதிக்கும் நடைமுறைக்கு இணங்க, இது வடக்கு-கிழக்கை யுத்த சூன்யப் பிரதேசமாக்குவதில் இறுதியில் முடியும்.

'உடன்பாட்டின் வேகத்தை தொடர்ந்து பராமரிக்குமுகமாக அரசாங்கம் உடன்பாட்டை அமுல் நடத்துவதில் காலவிரயம் செய்யக் கூடாது. காரணம் ஒவ்வொரு நிமிடமும் இலங்கை மக்களுக்கு முக்கியமானதாகும்.

உடன்பாடு அமுல் செய்யப்படுவது கட்டம் கட்டமாக இடம்பெற வேண்டும் என்பதை இதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்''

இவ்வாறு திரு. ஸ்ரீநிவாசன் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (த-எ)

ஆகஸ்ட் மாதம் 875 பேர் மலேரியாவினால் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் 875 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 73 பேர் மூளை மலேரியாவினாலும் 802 பேர் சாதாரண மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டனர்.

சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவிற்குள் வரும் பருத்தித்துறையிலேயே அதிகமாக 62 பேர் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் 10 பேரும் சாவகச்சேரியில் ஒருவரும் மூளை மலேரியாவினால் குறிப்பிட்ட காலப்பகுதியில் பாதிக்கப்பட்டிருந்தனர்

யாழ். மாவட்ட மலேரியாத் தடுப்பு இயக்கத்தினர் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் இது தெரியவந்தது. (த-162)

இரண்டு நாள் கருத்தரங்கு

சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தை எவ்வாறு கொண்டு நடத்துவது என்பது தொடர்பான 2 நாள் கருத்தரங்கு ஒன்றை நடத்த யாழ். மாநகரசபை ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

யாழ். மாநகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கு இக்கருத்தரங்கு நடத்தப்படும்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் கருத்தரங்கு நடத்தப்படும். (த-17)

நினைவுச் சின்னமாக பாரதியாரின் இல்லம்

சென்னை, ஒக். 4

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் இல்லம் அவரது நினைவுச் சின்னக் கட்டடமாக நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. சென்னை, திருவல்லிக் கேணியில் அமைந்துள்ள அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவிடமாக்கித் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா திறந்து வைத்தார். (த-5)

குறைந்த விலையில் பசளை

கொடிகாமம், ஒக் 4

கொடிகாமம் புத்தூர் சந்தி கமநல சேவைத் திணைக்களம் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் அடிக்கட்டுப் பசளைகளையும் பழமரக் கன்றுகளையும் விநியோகம் செய்கின்றது. (த-75)

சனசமூக நிலையங்கள் ஊடாக நகர அபிவிருத்தி திட்டங்கள்

அரியாலை, ஒக். 4

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசங்களை அவ்வப்பகுதி சனசமூக நிலையங்களின் ஊடாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

யாழ் மாநகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் தமது பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை உடனடியாகத் தயாரித்து அனுப்பி வைக்கும்படியும் அவர் கேட்டுள்ளார்.

சனசமூக நிலையங்களால் தயாரிக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி பட்டியல் தரவு வங்கியில் வைக்கப்பட்டு பின்னர் படிப்படியாக அவை செயல்படுத்தப்படும் என்றும் அவர் சொன்னார். (த-17)

ஓய்வூதியம்

வடமராட்சி, ஒக். 4

கடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க கிராமிய வங்கியில் செப்டெம்பர் மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு இன்று திங்கள் முதல் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-173)

மொஸ்கோ வீதிகளில் மோதல்

மொஸ்கோ ஒக். 4

ரஷ்ய பாதுகாப்புப் படைகளுக்கும் ஜனாதிபதி யெல்ட்சினின் எதிராளிகளுக்கும் இடையில் நேற்று மொஸ்கோ வீதிகளில் கடுமையான மோதல்கள் ஏற்பட்டன என்று பி. பி. ஸி. தெரிவித்தது. (க)

கடந்தமாதம் யாழ். ஆஸ்பத்திரி;

வெளிநோயாளர் பிரிவில் 26 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

யாழ்ப்பாணம், ஒக் 4

யாழ். போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவில் கடந்த மாதத்தில் மட்டும் 26 ஆயிரத்து 828 பேர் சிகிச்சை பெற்றனர்.

5 ஆயிரத்து 249 பேர் வார்ட்டுகளில் தங்கியிருந்தும் சிகிச்சை பெற்றனர்.

அத்துடன் விசர்நாய்க் கடிக்கு இலக்காகி 28 பேரும், சாதாரண மற்றும் கட்டாக்காலி நாய்களால் கடியுண்ட 178 பேரும் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

திலீபனின் கல்வி லட்சியத்தை முன்னெடுக்க வேண்டும்

கல்வி மேம்பாட்டுப் பொறுப்பாளர் உரை

யாழ்ப்பாணம், ஒக். 4

"திலீபனின் தியாகத்தை நினைவு கூரும் நாம் மாணவர் சமுதாயம் மேல்நிலை அடைய வேண்டும் என்ற அவரது இலட்சியத்தையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்''

அண்மையில் நடைபெற்ற யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய திருவுருவ நினைவு தினம் பரிசளிப்பு விழாவில் உரை நிகழ்த்திய தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை யாழ். பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு சி. வேலாயுதம் மங்கள விளக்கேற்றித் தொடக்கி வைத்தார்.

திரு. வே. இளங்குமரன் மேலும் பேசுகையில் கூறியதாவது!

கல்வியில் தமிழிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக மாணவர் அமைப்பின் மூலம் அதற்கு [illegible] தவர் திலீபன் [illegible] ரத் தமிழுக்கும் உடலை மருத்துவ மாணவர்களுக்குமாக அர்ப்பணித்த அந்தத் தியாகியின் உணர்வுடன் எமது மாணவர்களுக்கு விடுதலையினதும் கல்வியினதும் தேவையை உணர்த்தும் என்றார்.

அதிபர் திரு. இராமலிங்கம் தமது தலைமையுரையில்; கல்வி விளையாட்டுத்துறையிலும், ஒழுக்கம் கட்டுப்பாடு என்பவற்றைப் பேணிக் காப்பதிலும் எமது கல்லூரி முன்னிலை வகிக்கிறது. எமது தேவைகள் குறித்து நாம் கேட்டுக் கொள்ளும்போதெல்லாம் கல்வித் திணைக்களம் அவற்றை நிறைவேற்றி இங்குள்ள மாணவர்களின் உயர்வுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கி வந்துள்ளது. இதற்காக நாம் எமது கல்விப் பணிப்பாளரையும் இதர அதிகாரிகளையும் நன்றியுடன் நினைவு கூருகிறோம் என்று கூறினார்.

யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருத பீடத் தலைவர் பேராசிரியர் சிவசாமி நிறுவுனர் நினைவுரையை நிகழ்த்தினார். [illegible] யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் வெளியீட்டு உரை நிகழ்த்தினார்.

மலரின் முதற் பிரதியை யாழ். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் திரு. வைத்திலிங்கத்திடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வேலாயுதம், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் மாணவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

கல்லூரி பிரதி அதிபர் திரு. பொ. நடராசா செல்வன் சி. பிரதீபன் ஆகியோரும் பேசினார்கள்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க-111)

செய்திக் கொத்து

ஆங்கில தினம்

மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் ஆங்கில தினம் திரு. மா. மகாதேவன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. ஆங்கிலக் கல்வி ஆலோசகர் திரு. அ. தம்பிப்பிள்ளை ஆங்கிலப் படிப்பின் முக்கியத்துவம் பற்றி உரை நிகழ்த்தினார். (க-89)

மூலவள நிலைய நடமாடும் சேவை

யாழ். மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தின் மூன்றாவது நடமாடும் சேவை அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. (க)

றோட்டரிக் கழக மருத்துவ சேவை

யாழ் றோட்டரிக் கழகம் வடபிராந்திய போக்குவரத்து சபை ஊழியர்களுக்கான இலவச மருத்துவச் சேவையை செப்டெம்பர் 19ஆம் திகதி காலை கோண்டாவில் சாலையில் நடத்தியது. (க)

சுயஉதவி ஊக்குவிப்பு

உலக தரிசன நிறுவனம் தென்மராட்சிப் பகுதியில் முசுறி, கைதடி, நாவற்குழி, தவசிகுளம் ஆகிய இடங்களில் உள்ள வசதி குறைந்த மக்களுக்கு மூலம் பொருளாக சுய உதவி ஊக்குவிப்பினை வழங்குகின்றது. (க-117)

பெயர் மாற்றம்

அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் பெயர் அச்சுவேலி மத்திய கல்லூரி என மாற்றப்பட்டுள்ளது (க-11)

தவணை முறையில் சூட்டடுப்பு

கடற்புலிகளின் பொருளியல் மேம்பாட்டு நிறுவனத்தால் மூன்று மாதத் தவணை முறையில் சிக்கன இரட்டைச் சூட்டடுப்பு கட்டிக்கொடுக்கப்படுகிறது. (க-155)

நிதி ஒதுக்கீடு

இத்தாவில் உள்ள இயக்கச்சி மகா வித்தியாலயம், வேம்பொடுகேணி சி. சி. த. க. பாடசாலை ஆகியவற்றுக்கு விஜயம் செய்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் க. பொன்னம்பலம் இவ்விரு பாடசாலைகளுக்கும் தளபாடங்கள் கொள்வனவு செய்ய ரூபா 50 ஆயிரத்தை வழங்கியுள்ளார். அத்துடன் இவ்விரு பாடசாலைகளுக்கும் தற்காலிக வகுப்பறைகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்வதாகவும் அவர் அறிவித்துள்ளார் (க-117)

தொழுநோய்

சுழிபுரம் குடாக்கரைப் பகுதியில் இரண்டு புதிய தொழுநோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். இப்பகுதியில் புதிதாகத் தொழுநோய் தொற்றும் தன்மை காணப்படுவதால் தடுப்பு நடவடிக்கைகளை தொழுநோய்க் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் மேற்கொண்டு வருகின்றார். (க-162)

செஞ்சிலுவை வைத்தியசேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையினர் யாழ் மாவட்டத்தில் நடமாடும் வைத்திய சேவையை விரிவுபடுத்தியுள்ளனர்.

இந்தத் திடீர் நடமாடும் வைத்தியசேவைப் பிரிவினர் யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களுக்குச் சென்று அகதிகளுக்கு வைத்திய சேவையை அளித்து வருகின்றனர். (க-17)

இசை நடன வகுப்பு ஆரம்ப விழா

யாழ். குருநகர் நடன நல்லிசைக் கலாமன்றத்தின் இசை நடன வகுப்புக்களின் ஆரம்ப விழா அண்மையில் குருநகரில் திரு. இ. தர்மரத்தினத்தின் தலைமையில் நடைபெற்றது.

மன்றத்தின் செயலாளரும் யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தின் அதிபருமான திரு. இ. தார்சீசியஸ், மன்றத்தின் பணிகளைப் பற்றி உரை நிகழ்த்தினார். பங்குத் தந்தை வண. நேசநாயகம் ஆசி வழங்கினார். (க)

மழை நீரைச் சேமிப்போம்
விளை பொருளைப் பெருக்குவோம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உடனடி வேலைத் திட்டங்கள்

ஐ. நா. தூதரகம் ஆரம்பிக்கும்

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு வேலைத் திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்கவுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பிரதிநிதி திரு. அலன் டேவிற் இத்தகவலைத் தெரிவித்தார்.

முதற்கட்டமாக கிளிநொச்சியை மன்னார் மாவட்டத்துடன் இணைக்கும் பிரதான வீதியில் ஜெயபுரம் பகுதியில் 5 பாலங்கள் அமைத்து மழைக்காலத்தில் போக்குவரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மழைக்காலங்களில் 5 இடங்களில் இவ்வீதியை ஊடறுத்து மழை நீர் பாய்வதால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் இணைந்து இவ் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்கு ரூபா 10 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தற்போது குடியமர்த்தப்படும் அகதி மாணவர்கள் கல்வி கற்பதற்காக 875 கதிரை, மேசைகளும் கொழும்பில் இருந்து தருவிக்கப்படும் என்றும்—

சிறு கைத்தொழில் ஊக்குவிப்பு வேலைகளிற்காக நிதியுதவி வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-97)

சாவகச்சேரி நகரில் உள்ள

அரசாங்க அலுவலகங்கள் வேறு இடங்களுக்குமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 4

சாவகச்சேரி நகரப் பகுதியில் அடிக்கடி விமானத் தாக்குதல்கள் இடம்பெறுவதால், அங்குள்ள அரச செயலகங்களை இடமாற்றும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

பாதுகாப்பு நிமித்தம் நகரை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். வர்த்தக நிலையங்கள் சிலவும் வேறு இடங்களுக்கு இடம் மாற்றப்பட்டுள்ளன.

தென்மராட்சி உதவி அரச அதிபர் அலுவலகம், புத்தூர் சந்தியில் உள்ள சமூக சேவை நிலையத்தில் இன்று முதல் இயங்கி வருகிறது. இதே போல் ஏனைய பல அலுவலகங்களும் வேறு இடங்களுக்கு மாற்றப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

மற்றொருதொகுதிமாணவர் பல்கலைக் கழகங்களுக்கு!

கொழும்பு, ஒக். 4

1992 ஆகஸ்டில் நடந்த ஜி.சீ.ச. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி, இன்னொரு தொகுதி மாணவர்களை 1993-1994 கல்வியாண்டில் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்க பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

பல்கலைக் கழக அனுமதி பெறுவதற்கு தகுதி பெற்றும் நீண்ட காலமாக பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படாமல் காத்து இருந்த மாணவர்களை அனுமதிப்பதற்காக இந்த நடவடிக்கையைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு எடுத்துள்ளது.

தகுதி பெற்ற மாணவர்கள் இதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 18 ஆம் திகதியில் இருந்து அடுத்த மாதம் 19 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு தினம் 1993 நவம்பர் 22 ஆம் திகதியாகும்.

இம் மாணவர்கள் பெற்று இருக்க வேண்டிய ஆகக் குறைந்த மொத்தப் புள்ளிகளை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அடுத்த வாரம் வெளியிடும் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

1991 ஜி.சீ.ச. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மேலதிகமாக இம் மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

இரண்டு தொகுதி மாணவர்களும் தமது கல்வி ஆண்டை அடுத்த வருடம் ஒரே சமயத்தில் ஆரம்பிப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2,227 தமிழ் மக்கள் முகாம்களில் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ முகாம்களில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் அமைத்துள்ள மனித உரிமைகள் பணிக்குழுவின் தலைவர் திரு. ஏ.சீ.சூசா இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அவர் வெளியிட்டுள்ள தரவுகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள படை முகாம்களிலேயே அநேகர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வடக்கு - கிழக்கு படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 2,227 தமிழர்களில் மட்டக்களப்பில் மட்டும் 982 பேர் உள்ளனர்.

திருகோணமலையில் 141 தமிழர்களும், வவுனியாவில் 60 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். மற்றும் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், அம்பாறை மாவட்டங்களில் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் புள்ளி விபரங்களும் திரு. சூசா வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தரப்பட்டுள்ளன. (அ-3)

திருமலைக்குத் திரும்பி செல்கிறது 'கோமாரி'

யாழ்ப்பாணம், ஒக். 4

பருத்தித்துறையில் உணவுப் பொருள்களை இறக்குவதற்காக வந்து, பின்னர் காங்கேசன்துறையில் சில தினங்கள் தரித்து நின்ற 'கோமாரி' கப்பல் நேற்று திருகோணமலைக்குத் திரும்பிச் சென்றது.

பருத்தித்துறைக்குச் சென்று பொருள்களை இறக்குவதற்கு "கோமாரி" கப்பலுக்கு பாதுகாப்பு அமைச்சு நேற்று வரை அனுமதி வழங்கவில்லை என்றும் —

கப்பலில் உள்ள குடிதண்ணீர் மற்றும் பாவனைக்கான உணவுப் பொருட்கள் முடிவடைந்ததால், கப்பல் அவற்றைப் பெறுவதற்காக திருகோணமலைக்கு திரும்பிச் செல்வதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு பின்னரே கப்பலில் இருந்து பொருள் இறக்கும் வேலைகள் பருத்தித்துறையில் ஆரம்பிக்கும் என மற்றொரு செய்தி தெரிவித்தது.

பருத்தித்துறைக்கு கப்பலைக் கொண்டு வந்து பொருள்களை இறக்குவது குறித்து பாதுகாப்பு அமைச்சிடம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளில் ராணுவத் தலையீடு

யாழ்ப்பாணம், ஒக். 4

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் உதவிகளை கட்டுப்படுத்தவும், தாம் நினைத்தவாறு விநியோகிக்கவும் மட்டக்களப்பு இராணுவ இணைப்பு அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

நிவாரண மற்றும் மறுவாழ்வு உதவிகளை வழங்கும் அலுவல்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து தலையிடுவதற்கான சகல நடவடிக்கைகளையும் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் குலவர்த்தன மேற்கொண்டுள்ளார்.

நிவாரண, மறுவாழ்வு உதவிகளை வழங்குவதற்கென அரச சார்பற்ற நிறுவனங்களின் மீளாய்வுக்குழு ஒன்றை அமைத்து அதன் தலைவராகத் தானே பணிபுரிகிறார்.

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு 20க்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி வருகின்றன.

அவை வழங்கும் உதவிகள் சரியான முறையில் எல்லோருக்கும் கிடைக்கவில்லை என்றும். பாதிக்கப்பட்டவர்களில் ஒரு சாராருக்கே அவை வழங்கப்படுவதாகவும், அதனைச் சீர்செய்வதற்காகவுமே அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கொண்ட மீளாய்வுக்குழு அமைக்கப்பட்டதாக அவர் தெரிவித்திருக்கிறார். (ஆ-3)

இன்று தீர்த்தம்

வடமராட்சி, ஒக். 4

சரித்திரப் பிரசித்திபெற்ற நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலய வருடாந்தத் தீர்த்தோற்சவம் இன்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. (ஆ-178)

வியாழ மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 4

வியாழ பகவான் இன்று ஒக்டோபர் 4 ஆம் திகதி கன்னி ராசியிலிருந்து துலா ராசிக்கு மாறுகிறார் என்று வாக்கிய பஞ்சாங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் ஒரு வருட காலத்துக்கு துலா ராசியிலேயே சஞ்சரிப்பார்

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி வியாழ பகவான் இம் மாதம் 12 ஆம் திகதி துலா ராசிக்கு மாறுகிறார். (அ)

சமுகம் தரவும்

யாழ்ப்பாணம், ஒக். 4

தமிழீழம் பொதுக்கல்வித் தேர்வின் விஞ்ஞான செய்முறைப் பரீட்சை தொடர்பான சில ஆலோசனைகளை வழங்கவிருப்பதால் சகல விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்களையும் இன்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்திற்கு சமுகம் தரும்படி கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ)

வல்லை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குமோ பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

மேற்படி லொறியில் பருத்தித்துறையில் இருந்து ஏற்றி வரப்பட்ட மண்ணெண்ணெய் பரல்கள் இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-173)

கருணாநிதியைக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக அரசின் இந்த எச்சரிக்கை, தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் இல்லை என்ற ஜெயலலிதாவின் கூற்றை பொய்யாக்கி உள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர் பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் குறித்து தான் முன்பே எச்சரித்ததாகத் தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, தமிழக அரசு இது தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

தி.மு.க. பிரமுகரும் ராஜ்ய சபை எம்.பியுமான வை. கோபாலசாமி, தி.மு.கவுக்குள் கருணாநிதிக்கு சவால் விடக்கூடிய ஒரு சக்தியாக உருவெடுத்து வருவதும் —

கருணாநிதிக்குப் பின் கருணாநிதியின் மகன் ஸ்டாலின் கழகத்தின் தலைவராவதை வை. கோபாலசாமியின் வளர்ச்சி தடுத்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-த)

கிளாலியை .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அது இச்சமயத்தில் இராணுவத்தால் முடியாத காரியம் என்றும் விமர்சகர்கள் தெரிவித்தனர்.

அதனால் புறப்பட்ட இடத்துக்கே — ஆனையிறவுக்கே — மீண்டும் திரும்ப படையினர் முடிவு செய்யக்கூடும்.

வெகு விரைவில் ஆரம்பமாகவிருக்கும் பருவமழையால் பெரும் கஷ்டங்களையும்படையினர் எதிர்நோக்கவேண்டியிருக்கும்.

இதுவும் கிளாலியில் தொடர்ந்து நிலைகொள்வதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் குழப்ப [illegible] பிட்டனர். (உ-எ-6)

ஹெலித் தாக்கு

யாழ்ப்பாணம், ஒக். 4

பூநகரி- கல்முனை, பூவரசந்தீவு, மண்ணித்தலை பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மீது நேற்றுக் காலை 7.15 மணியளவில் ஹெலியில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேவேளை ஹெலி வட்டமிட்டதும் குடாக் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் பலர் கடலில் பாய்ந்து கரைக்கு வந்து சேர்ந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-80-81)

நெரிசலில் 12 பேர் பலி!

சென்னை, ஒக். 4

தமிழ்நாடு-பழனியில் நேற்று இரவு இலவச வேட்டி, சேலை வழங்கும் ஒரு வைபவத்தில் ஏற்பட்ட நெரிசல் காரணமாக பன்னிரண்டு வயோதிபப் பெண்கள் உயிரிழந்தனர்.

ஐந்நூறு பேருக்கு இலவச உடை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சியில், சுமார் ஐயாயிரம் ஆண்களும் பெண்களும் திரண்டதால் பெரும் நெரிசல் ஏற்பட்டது. (உ-எ)

விடைத்தாள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு விடைத்தாள் பொதிகளை சேகரிப்பவர்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு பின்னர் சம்பந்தப்பட்ட இணைப்பு நிலையங்களுக்கு வருகை தரவுள்ளனர். இதனால் இணைப்பு நிலையங்களில் தங்கி நின்று விடைத்தாள் பொதிகளை ஒப்படைக்குமாறு இணைப்பு நிலை அலுவலர்களை தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார். (உ-8)

குறைந்த விலையில் மரமுந்திரிகை

கடற்புலிகளின் பொருளியல் மேம்பாட்டு நிறுவனம் மரமுந்திரிகைக் கன்றுகளை குறைந்த விலையில் விநியோகித்து வருகிறது. (உ-155)

விதைநெல் விநியோகம்

தென்மராட்சி சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் விதை நெல்லை விநியோகம் செய்து வருகிறது. நெல் 1 மூடை 475 ரூபாவாக விற்கப்படுகிறது. (உ-75)

கிளாலியைப் பிடித்தாலும் அதை பாதுகாப்பது சிரமம்

"டெய்லி நியூஸ்" ஆசிரியர் பேட்டி

கிளாலியைக் கைப்பற்றுவதே ஒரு பிரச்சினை. அப்படிக் கைப்பற்றிய பகுதியை தொடர்ந்தும் பாதுகாப்பது என்பது அதைவிடக் கடினமானது.

அரசப் பத்திரிகையான "டெய்லி நியூஸ்" ஆசிரியர் மெனிக் டி சில்வா பி.பி.சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

பாரிய உயிர், உடைமை இழப்புக்களைச் சந்தித்து இராணுவம் கைப்பற்றிய இடங்களைத் தொடர்ந்து தக்கவைக்க முடியாமல் கைவிடுவதாயின், இந்த இராணுவ நடவடிக்கைகளே வீணான ஒன்று என்றே கருதப்பட வேண்டும்.

மேலும் வடபகுதியில் எமது செய்தியாளர்கள் யாரும் இல்லாததால் அங்கு நடைபெறும் சண்டை பற்றி இராணுவத் தரப்புத் தரும் செய்திகளைத் தான் நாம் நம்பவேண்டி உள்ளது.

தற்போது நடைபெறும் சண்டை குறித்து எதிர்க்கட்சியினர் எதுவித கருத்தும் கூறாமல் மௌனம் சாதித்து வருகின்றனர் என்று அவர் சொன்னார். (த-6)

ஒப்பரேஷன் யாழ்தேவிக்கு கிழக்கில் இருந்தும் படைகள்

கொழும்பு, ஒக். 4

குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒப்பரேஷன் யாழ்தேவிக்கு கிழக்குப் பகுதி முகாம்களில் இருந்தும் படையினர் அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த இராணுவ நடவடிக்கையில் சுமார் 20 ஆயிரம் துருப்புக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை யாழ்தேவி இராணுவ நடவடிக்கைக்கென சகல விமானங்களும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டன என விமானப் படை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (ஒ-8)

இலங்கையில் தாக்குதல் தமிழகத்தில் மௌனம்

இலங்கை—வடக்கில் இராணுவம் நடத்திவரும் தாக்குதல் குறித்து கடந்த காலத்துக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் தமிழ்நாடு மௌனம் கடைப்பிடித்து வருகிறது.

சென்னையில் உள்ள பி.பி.சி செய்தியாளர் முன்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மூன்று நான்கு ஆண்டுகளுக்கு இலங்கைத் தமிழர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து தமிழ்நாட்டு மக்கள் கண்டனம் எழுப்பினர் இப்போது விடுதலைப் புலிகள் மீது நடத்தப்படும் தாக்குதல் பற்றி மௌனம் சாதிக்கப்படுகிறது.

இத்தாக்குதல்கள் பற்றி இந்தியச் செய்தித்தாள்கள் தினமும் செய்திகள் வெளியிட்டும் கூட எந்த ஒரு ஆங்கில, தமிழ் செய்தித்தாளோ தலையங்கம் கருத்து வெளியிடவில்லை.

காரசாரமான கண்டனங்களை முன்பு வெளியிட்டு வந்த தி.மு.க.வின் முரசொலி, தி.மு.க. சார்பு தினகரன் கூட இம்முறை எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை.

வழக்கமாக விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் குழுக்கள் மற்றும் ஈழம் கட்சிகள் கூட இத்தாக்குதல் பற்றி எந்தவித அறிக்கையும் வெளியிடவில்லை.

இதில் வியப்பு என்னவென்றால், இத் தகராற்றில் சம்பந்தப்பட்ட இனப்பிரச்சினை அரசியல் விவகாரங்கள் கூட தமிழகத்தில் எவ்வித அக்கறையையும் எழுப்பியதாகத் தெரியவில்லை.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, தீவிரவாதப் பிரச்சினைதான் உண்டு என்று ஜனாதிபதி விஜேதுங்கா கூறிய போது, தமிழகத்தில் உள்ள தமிழர்கள் எவ்வித உணர்வலைகளையும் வெளியிடவில்லை. — இப்படி பி.பி.சி. மேலும் தெரிவித்தது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04-10-1993 இல் [illegible] வெளியிடப்பெற்றது.